## தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை – 2016

தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டி போதிலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் நிலைமை

அதிகாரசபையினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிதிக்கூற்றுக்கள் விடயம் | பெறுமதி |
|---|---|
| **சொத்துக்கள்** | **ரூபா** |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 16,752,897 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 2,492,381 |
| மொத்தச் சொத்துக்கள் | 19,245,278 |

**உரிமை மூலதனமும் பொறுப்புகளும்**

| | |
|---|---|
| உரிமை மூலதனம் | 3,705,701 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 13,840,972 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,699,235 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 19,245,278 |
| மொத்த வருமானம் | 30,592,712 |
| மொத்தச் செலவினம் | 27,064,820 |
| மிகை | 3,527,892 |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (*)முற்பணம் வழங்கும் போது குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்கு தேவைப்படும் தொகையைச் சரிவர மதிப்பீடு செய்யாது முற்பணம் வழங்கியமையால் வழங்கிய முற்பணத்தில் 30 சதவீதத்துக்கும் மேற்பட்ட தொகை எஞ்சிய 35 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அத்தொகை ரூபா 351,796 ஆனதுடன் வழங்கப்பட்ட முற்பணத்தில் 49 சதவீதமும் ஆகும்.<br><br>(*) 01 மாதம் முதல் 05 மாத காலத்திற்கு இடைப்பட்டு தீர்வுசெய்யப்பட்ட 37 சந்தர்ப்பங்களின் பெறுமதி ரூபா 6,900,305 ஆக இருந்தது.<br><br>(*) முற்பணம் தேவைப்படுவதற்கு முன்னரே குறிப்பிடத்தக்க நாட்களுக்கு முன்னராக பணம் வழங்கப்பட்டிருந்த 09 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 177,117 இருந்தது. |

(*) 2016 நவம்பர் 30 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் எனக் குறிப்பிடப்ட்டு முற்பணம் வழங்கியிருந்த 52 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 30,055,550 ஆக இருந்தது. இவாண்டில் வழங்கிய முற்பணத் தொகையில் அது 84 சதவீதமாக இருந்ததுடன் அம்முற்பணங்களில் ரூபா 11,399,000 தொகையானது 2018 செப்தெம்பர் 14 ஆந் திகதியிலும் தீர்வு செய்யப்படாதிருந்தது.

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அதிகாரசபையின் பொருட்கள் மற்றும் நிலையான சொத்தக்கள் ெதாடர்பாக 2016 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 செயற்பாடுகளும் மீளாய்வும்

2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையினது அதிகாரச் சட்டத்தின் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதில் 2016 ஆம் ஆண்டின் போதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) அதிகாரச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டுச் சந்தைகளில் வெற்றியைப் பெறுவதற்கு இயலுமான தேசிய தொழில் முயற்சிகளை சர்வதேச மயப்படுத்தும் நோக்குடன் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியே உருவாக்குதல் மற்றும் அமுலாக்குதல் தொடர்பாக அக்கரை கொள்வதற்காக ஊக்குவித்தல்..

(ii) தொழில்நுட்ப முன்னேற்றம், உற்பத்தி அபிவிருத்தி மற்றும் ஆக்க உரிமை வணிக மயப்படுத்தலுக்கான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டிற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியம் ஒன்றை உருவாக்குதல்.

**3.2** மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளவாறு இருந்தது.

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்கள் மற்றும் வியாபார மேம்படுத்தல் சேவைகள் வழங்குபவர்களுக்காக தகவல் வழங்கும் போது நோக்கில் 4 செய்திப் பத்திரிகைகள் மீளாய்வாண்டில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு செய்திப்பத்திரிகை மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்கள் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை உள்ளடக்கப்பட்ட தரவு முறைமையொன்றை நிர்மாணித்து பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் அதன் செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது.

(இ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்கள் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மற்றும் முதலீட்டாளர் போன்ற தரப்பினர்களுக்கு வியாபார நடவடிக்கைகளுக்கான மேற்கொள்ளும் போது முகங்கொடுப்பதற்கு நேரும் சிக்கல்களை தீர்வு செய்வதற்கு வழிகாட்டலை நோக்கமாக கொண்டு பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வியாபார கண்காட்சிகளை நடாத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 270,000 நிதி ஏற்பாடு முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது மாவட்ட மட்டத்தில் வியாபார கண்காட்சிகளை நடாத்துவதன் செயன்முன்னேற்றம் முறையே 25 சதவீதம் மற்றும் 20 சதவீதம் மற்றும் நடாத்தப்பட்ட வர்த்தக கண்காட்சிகள் அளவு 11 ஆக இருந்தது.

(ஈ) ரூபா 50,000 செலவு செய்து மீளாய்வாண்டில் தேசிய மட்டத்தில் வர்த்தக கண்காட்சிகளை நடாத்துவதற்காக நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் வர்த்தக கண்காட்சிகள் எதுவும் நடாத்தப்படாதிருந்த போதிலும் ஒதுக்கீடு செய்த 20 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் சந்தை வாய்ப்புக்களை இலகுபடுத்தும் நோக்கில் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக சந்தைகள் 02 வீதம் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின போது ரூபா 420,000 இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டில் 74 சதவீதம் அதாவது ரூபா 314,000 செலவிடப்பட்டு தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் வர்த்தக சந்தைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து அடையப்பட வேண்டிய செயன்முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திலிருந்து 50 சதவீதமாக இருந்தது.

(ஊ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களை இலக்காகக் கொண்டு அவர்களின் முயற்சியாளர் அறிவினை மேம்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 500,000 நிதிஏற்பாடுகளில் கீழ் சான்றிதல் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டில் பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித கிரயமொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் 25 சதவீதமாக இருந்தது.

(எ) யுத்தத்தினால் இடம்பெயர்ந்த விதவைகளை வெற்றிகரமான முயற்சியாளர்களாக மாற்றி அவர்களின் சீவனோபாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2016 ஆம் ஆண்டில் 50 விதவைகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 250,000 ஆக இருந்தது. இம்முழு நிதியேற்பாட்டையும் பயன்படுத்தியிருந்த போதிலும் தேவையுள்ள விதவைகளை இனங்காணும் கணிப்பீடொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் 10 சதவீதமாக இருந்தது.

(ஏ) பாடசாலை மாணவர்களுக்கு இடையே முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களை 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வடமேல், சப்ரகமுவ, ஊவா வெல்லஸ்ஸ, ஜயவர்த்தனபுர, ருஹுனு, யாழ்ப்பாணம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் 250 மாணவர்களை பயிற்றுவித்தல் மற்றும் அதன் மூலம் 25 மாணவர்களை முயற்சியாளர்களாக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,200,000 ஆக இருந்தது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் 98 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது.

### 3.3 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணி 22 ஆக இருந்தமையால் 10 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டின் போது அவ்வெற்றிடங்களில் 02 ஐ நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் சாரதி ஒருவர் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சம்பளமும் படிகளுமாக ரூபா 967,752 தொகையும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் பிரயாணச் செலவினமாக ரூபா 252,310 அதிகாரசபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி அபிவிருத்தியை உற்சாகப்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை விரிவாக்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றிற்கு ஊக்குவிப்பளித்தல் அதிகாரசபையின் பிரதான நோக்கமான போதும், அந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தவல்ல தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில் முயற்சிகள் மேம்பாட்டு உதவி உத்தியோகத்தர்களது 13 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 08 பதவிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடங்களாக இருந்தன.

### 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் | கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டைப் பேணாமை |
| (ஆ) | முற்பணம் | முற்பணம் தீர்வு செய்வதில் தாமதம் |